**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**<u>OS.NO.56/2018</u>**

| | | |
|---|---|---|
| Name | : | குமரன் |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling /Occupation | : | சார்பதிவாளர், காட்பாடி |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.06.2024.

<u>முதல் விசாரணை</u>

நான் காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிபிட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்திருக்கிறேன். அந்த ஆவணம் உயிலாகும். ஏற்கனவே அ.த.சா.ஆ 3ஆக குறியீடு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகலை கையில் எடுத்து வந்திருக்கிறேன் (அ.சாஆ 3 சாட்சியிடம் அசல் ஆவணம் காட்டப்பட்டது). அந்த ஆவணத்தின் தேதி 27.1.1985 தேதியிட்ட உயில் ஆவணம். அந்த

ஆவணம் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. உயில் ஆவணத்தை எழுதியவர் ஆதிமூல கவுண்டர். ஆதிமூல கவுண்டர் சாம்பசிவ கவுண்டர் மகன்கள் பன்னீர்செல்வம், லிங்கமூர்த்தி அதாவது அவரது பேரன்களுக்காக உயில் எழுதி கொடுத்துள்ளார். ஆதிமூல கவுண்டருக்கு சாம்பசிவ கவுண்டர் மகன். ஆதிமூல கவுண்டர் நல்ல உடல்நிலையிலுதம், மனநிலையிலும் எழுதியதாக வாசகம் அதில் உள்ளது.

அந்த உயில் சொத்து விவரத்தில் தான் சொந்தமாக கிரையம் பெற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சொத்திற்குரிய சர்வே எண்கள், விஸ்தீரணம், சக்குபந்திகள் ஆகியவை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் இரண்டு பேர் சாட்சியம் கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் போட்டுள்ளார்கள். ஆதிமூலந்தான் இன்னார் என்பதை நிரூபிக்க இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் இரண்டு பேர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள்.

<u>1 முதல் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வா.சா.ஆ3 உயிலில் கண்டுள்ள விஷயங்கள் எனக்கு நேரிடையாக எனக்கு தெரியாது என்றால் சரிதான் ஆவணங்கள் அடிப்படையில சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என்.ஜே.எஸ் வாங்கிய தேதியிலிருந்து 120 நாட்களுக்குள் பதிவு செய்தால் தான் செல்லும் என்றால் சரிதான் அதற்கு மேல் பதிவு செய்தால் மாவட்ட பதிவாளரிடம் அனுமதி பெற்று தான் பதிவு செய்யவேண்டும். 24.9.1984 தேதியில் உயிலில் கண்டுள்ள இரண்டு முத்திரைத்தாள் வாங்கப்பட்டுள்ளது. இரண்டு முத்திரைத்தாளக்ளும் தலா 25 பைசா. 27.1.1985 தான் பதிவு செய்யப்பட்டுள்ளது அதாவா ஆத 126வது நாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயிலில் இரண்டாவது பக்கத்தில் பதிவு செய்யப்பட்ட தேதி என்று 28.1.1985 என்று போடப்பட்டுள்ளது. 27.1.1985 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறானது தானா என்றால் 27.1.1985 தாக்கல் செய்யப்பட்டது தவறுதலாக 28.1.1985 என்று

போடப்பட்டுள்ளது. 126 நாள் கழித்து பதிவு செய்ததால் மாவட்ட பதிவாளரிடம அனுமதி பெறப்பட்டதா என்றால் அவ்வாறான எந்த அனுமதி பெறவில்லை. 27.1.985 அன்று முத்திரைத்தாள் தாக்கல் செய்ததற்கான எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில இளநிலை அலுவலராக 2.8.2022 அன்று பணியில் சேர்ந்தேன். 27.1.1985-ல் மேற்படி உயில் தாக்கல் செய்ததாக மேற் குறிப்பு இல்லாத நிலையில் எதனடிப்படையில் 27.1.1985 அன்று தாக்கல செய்ததாக சொல்கிறேன் என்றால் உயிலில் கண்டுள்ள முதல் வரியை பார்த்து அனுமானத்தின் பேரில் கூறினேன்.

27.1.1985 அன்று அந்த உயில் தாக்கல் செய்யப்பட்டதது என்பதை காட்ட அதற்கு ஆதரவான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். முதல் முத்திரைத்தாளில் இரண்டாவது பக்கத்தில் பகல் 11 மணியிலிலிருந்து 12 மணிக்குள் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. ஆதிமூல கவுண்டரின் முத்திரைத்தாளின் முதல் பக்கத்தில் ஒரு கையெழுத்தும், அதன் பின்பக்கத்தில இரண்டு கையெழுத்தும் இரண்டாவது முத்திரைத்தாளில் முதல் பக்கம் ஒரு கையெழுத்தும் ஆக ஆதிமூலத்தில் 4 கையெழுத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். ஆதிமூலத்தில் 4 கையெழுத்துக்களும் வெவ்வேறு மாதிரியாக உள்ளது என்றால் சரிதான்.

உயிலில் முத்திரைத்தாளின் முதல் பக்கத்தில் 10வது வரியில் சுமார் எனது வயோதிக நிலையில் உடம்பு சுகம் இல்லாமல் இருப்பதாலும் என்று 12 வரியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கு தாக்கல் செய்த 2ம் வாதி லிங்கமூர்த்திக்கு வேண்டப்பட்ட சாட்சி என்றாலும், அவருக்கு சாதகமாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த காலத்தில் உயில் பதிவு செய்யும் போது எழுதி கொடுத்தவர் என்ற இடத்தில் கையெழுத்து மற்றும் கைரேகை பெறுவோம். தற்போது பையோமெட்ரிக் மூலமாக கையெழுத்து பெறுவோம்.

<u>மறுவிசாரணை</u>

நான் சார்பதிவாளர் அலுவலரின் அனுமதியோடு சாட்சியம் அளிக்கிறேன். உயில் எழுதப்பட்ட தேதி 27.1.1985. உயிலில் 28.1.1985ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பதிவான தேதி 29.1.1985. 3 புத்தகம் 58-வது பகுதி 99 - 100 பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சார்பதிவாளர்அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். உயிலை பொறுத்தவரை சாதாரண பேப்பரில் எழுதி வந்தால் கூட நாங்கள் பதிவு செய்வோம். முத்திரைத்தாளில் தான் எழுதவேண்டும என்ற அவசியம் இல்லை பதிவு கட்டணம் கட்டினால் நாங்கள் பதிவு செய்வோம்.

மறு குறுக்கு விசாரணை

29.1.1985-ல் பதிவு செய்யததாக உள்ள முத்திரையில் எந்த நேரத்தில் பதிவு செய்யப்பட்டதுள ன்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆதிமூல கவுண்டர் எந்த தேதியில் கையெழுத்து போட்டார் என்ற விவரம எனக்கு தெரியாது. அந்த காலகட்டத்தில் ஆள்மாறட்டம் செய்தும் பதிவு செய்ய வாய்புண்டு என்றால் சரிதான். உயிலில் கண்டுள்ள ஆதிமூலந்தான் பத்திர அலுவலகத்திற்கு வந்தாரா என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது என்றால் சரிதான். 1985-ல் எந்த மூலப்பத்திரம் எதுவும் இன்றி பெயா் மாற்றம் செய்யலாம் என்றால் சரிதான். அவ்வாறு வேறு நபருக்கு பாத்தியப்பட்ட சொத்தை கூட பதிவு செய்ய இயலும் என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்.